## திருவாரூர் மாவட்ட வேளாண்துறை சார்பில் மண் வள அட்டை குறித்த புத்தூட்ட பயிற்சியை மாவட்ட ஆட்சியர் முனைவர்.மா.மதிவாணன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கிவைத்தார்

திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் வேளாண்துறை சார்பில் மண் வள அட்டை குறித்த புத்தூட்ட பயிற்சியை மாவட்ட ஆட்சியர் முனைவர்.மா.மதிவாணன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கிவைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்ததாவது...

இப்பயிற்சியில் இந்தியாவில் வேளாண் உணவு உற்பத்தியில், தீவிர சாகுபடியால் உணவு உற்பத்தி அதிகரித்த போதிலும், உரப் பயன்பாடு அதிக அளவில் உள்ளது. அது போல் மாநிலத்திற்கு மாநிலம் உரப்பயன்பாடு வேறுப்பட்டு வருகிறது. சரிவிகித உரப் பயன்பாடு இல்லாத காரணத்தினால் மண்ணில் பயிருக்கு தேவையான அடிப்படை சத்துக்களான தழை, மணி. சாம்பல் சத்துக்களின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. இதை கண்டறிய மண் பரிசோதனை செய்வது மிக அவசியமாகும். ஒரு மண்ணிற்கு தேவையில்லாத உரத்தை பயன்படுத்துவது தவறான உரமிடுதலாகும். இவ்வாறு உரமிடுதல் உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் எந்த பங்கும் ஆற்றாது. அதே நேரம் கார மற்றும் அமிலத் தன்மை வாய்ந்த மண்ணில் உரமிட வேறு உரங்களை பயன்படுத்துதல் அவசியமாகும். எனவே பயிருக்கு தேவையான உரங்களுடன் மண்ணில் கார மற்றும் அமில தன்மைகளை சரி செய்யக்கூடிய உரங்களையும் இணைத்து உரமிடல் அவசியமான ஒன்றாகும்.

மண் பரிசோதனை மேற்கொண்டு அதனடிப்படையில் உரமிடுதல் அவசியமான ஒன்று என்பதால் மத்திய,மாநில பங்களிப்புடன் மண்வள அட்டை இயக்கம் உலக மண் வள பாதுகாப்பு வருடமான 2015 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இந்தியாவில் உள்ள அனைத்து விவசாய நிலங்களுக்கும் மண்வள அட்டை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அளிக்கப்பட வேண்டும்.

இம்மாவட்டத்தில் உள்ள 573 கிராமங்களில் ஆண்டு ஒன்றுக்கு 191 கிராமங்கள் தேர்வு செய்து 3 ஆண்டுகளில் மண் மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்யப்பட உள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சாகுபடி பகுதிகள் 5 ஹெக்டேர் வீதம் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு 5 ஹெக்டேருக்கும் பயிருக்கு தகுந்த விகிதத்தில் ஒரு மாதிரி வீதம் எடுத்து ஆய்வு செய்யப்பட உள்ளது. நடப்பு ஆண்டில் 191 கிராமங்களிலிருந்து 10134 மண் மாதிரிகள் எடுக்கப்பட உள்ளது. ஆய்வின் முடிவின் அடிப்படையில் அனைத்து விவசாயிகளுக்கும்

மண்வள அட்டைகள் வழங்கப்பட உள்ளது என மாவட்ட ஆட்சியர் முனைவர்.மா.மதிவாணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

பயிற்சியில் பத்து வட்டாரங்களை சேர்ந்த வேளாண்மை உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள், உதவி விதை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் கிடங்கு மேலாளர்கள் கலந்து கொண்டனர். அனைத்து அலுவலர்களும் உர மாதிரிகள் எடுப்பது குறித்தும் செயல்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் பயிற்சி நடைபெற்றது.

.இந்நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குனர் திரு.க.மயில்வாகணன்,துணை இயக்குனர் திரு.நடேசன்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) திரு.பெரியகருப்பன் மற்றும் அனைத்து அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.